பதைப் பற்றித் திட்டவட்டமாக அரசாங்கம் அறிவிக்கவேண்டும். அரசாங்கத்திற்கு இந்த வகையில் தெளிவான கொள்கை இருக்க வேண்டும். இவைகளையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பேசுவதற்காக இந்த அவையின் அலுவலை ஒத்தி வைத்துவிட்டு, நடைபெற்ற சம்பவங்களைப்பற்றியும், இனி காவல் துறையின் அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பதற்கும் விரிவாக விவாதிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏற்கெனவே அவையின் முன்னவர் இது பற்றி விளக்கம் தந்திருப்பதால், இதற்காக அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று அறிவிக்கிறேன்.

(பிற்பகல் 3-30)

(3) சேலம் இரும்பாலையில் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் மேலவை விதி 43-ன் படி கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிக்க ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

''சேலம் இரும்பாலையில் 4-9-78 ஆம் தேதி முதல் சுமார் 2,500 தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைக்காக வேலை நிறுத்தம் செய்து போராடி வருகின்றனர். இரும்பாலைக்கு நிலம் எடுத்துக் கொண்ட பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்று மாநில அரசும், இரும்பாலைத் திட்ட அதிகாரிகளும் கொள்கை அளவில் ஒத்துக் கொண்டிருந்தும், ''இரும்பாலை கட்டுமான பணி'' ''சேலம் உருக்காலைத் திட்ட பணிகளில்'' இது வரை பாதிக்கப்பட்ட மக்களில் தகுதியுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காமல் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருவதாலும், தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்காமல் புறக்கணித்து வருவதைக் கண்டித்துப் போராடி வரும் சங்கத்தையும், தொழிலாளர்களையும் நசுக்கக் கூடிய வகையில் இரும்பாலைத் திட்ட அதிகாரிகள் நடந்து கொள்வதாலும், கொண்டலாம்பட்டி காவல் துறை ஆய்வாளர் ரத்தினவேல் என்பவர் 11-8-1978 ஆம் தேதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்த தொழிலாளர்களை தகாத வார்த்தைகளால் திட்டியும், உதைத்

தும் அவமானப்படுத்தியதாலும் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதன் மூலம் ஒரு பதட்டமான நிலை உருவாகியிருக்கிறது.

18 கோரிக்கைகளை சேலம் இரும்பாலை தொழிலாளர் சங்கம் முன் வைத்து 4-9-78 ஆம் தேதி முதல் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு வருகிறார்கள். சுமார் 2,500 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களின் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுடன் 2-9-78 லே பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். ஆனால் அது முடிவு பெறவில்லை. அதைத் தொடர்ந்து 3-ம் தேதியன்று தொழிலாளர் நலத் துறை அலுவலர் அவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்திய நேரத்திலேயும் பேச்சு வார்த்தை முடிவு பெறவில்லை. பேச்சு வார்த்தைகள் முடிவு பெறாததன் காரணமாகத்தான் அவர்கள் கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கக்கூடிய இடத்திலே, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நின்று கொண்டிருக்கின்ற நேரத்திலே ஒரு போலீஸ் அதிகாரி, அவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியும், உதைத்தும் அவமானப் படுத்தியிருப்பதால், தொழிலாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதன் மூலம் பதட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்கு இம்மன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, பேச்சுவார்த்தைகளை சம்பந்தபட்ட இலாகா நடத்திக்கொண்டிருக்கிறது. மற்ற பிரச்சினைகள் ‘லா அண்ட் ஆர்டர் பிராப்ளம்’ சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன, முன் அறிவிப்பு இல்லாத காரணத்தினால், முழுத் தகவல்கள் கொடுக்க இயலவில்லை. தேவைப்பட்டால், சென்னை நகரத்திற்கே அழைத்து வந்து பேச்சு வார்த்தைகள் நடத்தலாம்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : பொறுப்புகளை என்னிடத்திலேயே விட்டு விடுகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் பதிலுக்குப் பிறகு ஒத்திவைப்பை மறுக்கிறேன்.

<u>திரு. சோ. ஆறுமுகம்</u> : விளக்கம் வேண்டும். நான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்று காலையிலேயே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவர் தீர்ப்புக்குப் பிறகு தொடர்ந்து பேச வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதையேதான் சொல்ல விரும்புகிறேன்.

5. அறிவிப்பு

(1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையில் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்ப மிட்டு தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 30/1978) சட்ட முன்வடிவு மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(1) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978)

(2) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/1978)

(3) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1978)

(4) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1978)

(5) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 36/1978)

(6) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1978)